# පොලිස් මාධ්‍ය කොට්ඨාසය

# பொலிஸ் ஊடகப் பிரிவு

# POLICE MEDIA DIVISION

14 වන මහල,සුහුරුපාය,බත්තරමුල්ල


| | | | |
|---|---|---|---|
| දිනය Date: 2026.07.23 පැය 1930 | දුරකථන අංකය Tel.NO: 011-2887973 | මගේ අංකය My NO: D/Media/Out/1203/2026 | විද්‍යුත් ලිපිනය E-Mails: dir.media@police.gov.lk |


## රත්‍රං සහ මුදල් තොගයක් සමඟ සැකකරුවන් 08 දෙනෙකු සහ සැකකාරියන් දෙදෙනෙකු අත්අඩංගුවට - වත්තේගම පොලිස් ස්ථානය.

2026.07.22 වන දින වත්තේගම පොලිස් ස්ථානයට ලද තොරතුරක් මත මඩවල ප්‍රදේශයේ හෝටලයක නවාතැන්ගෙන සිටි පුද්ගලයින් 08 දෙනෙකු සහ කාන්තාවන් දෙදෙනෙකු පරීක්ෂා කර ඔවුන් සන්තකයේ තිබී රත්‍රං කිලෝ 03 ග්‍රෑම් 790 ක් සහ රුපියල් එක් කෝටි හැට නව ලක්ෂයක් (16,900,000/=) සමඟ සැකකරුවන් අත්අඩංගුවට ගෙන ඇත.

සැකකරුවන් හා සැකකාරියන් වයස අවුරුදු 42 ත් 58 වයස්වල පසුවන වලපනේ, නාවලපිටිය, වැල්ලවත්ත, කොටහේන සහ මෝදර ප්‍රදේශවල පදිංචිකරුවන් වේ.

සිදුකළ වැඩිදුර පරීක්ෂා කිරීමේදී සැකකරුවන් සන්තකයේ තිබූ රත්‍රං ගල ගා පරීක්ෂා කිරීමට යොදාගන්නා ගලක්, ඇසිඩ් ලීටර් 01 ක් සහ ග්‍රයින්ඩර් 02 ක් පොලිස් භාරයට ගෙන ඇත. සැකකරුවන් අද දින පන්විල ගරු මහේස්ත්‍රාත් අධිකරණයට ඉදිරිපත් කිරීමෙන් පසු 2026.07.30 වන දින දක්වා රක්ෂිත බන්ධනාගාර ගතකර ඇත.

මෙම රත්‍රං සහ මුදල් සැකකරුවන්ට ලැබුණු ආකාරය සම්බන්ධයෙන් වත්තේගම පොලිසිය විසින් වැඩිදුර විමර්ශන සිදුකරනු ලබයි.

පොලිස් මාධ්‍ය කොට්ඨාසය.

## தங்கம் மற்றும் பெருமளவு பணத்துடன் 08 சந்தேகநபர்கள் மற்றும் 02 சந்தேகநபர் பெண்கள் கைது – வத்தேகம பொலிஸ் நிலையம்

2026.07.22 அன்று வத்தேகம பொலிஸ் நிலையத்திற்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், மடவல பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த 08 ஆண்கள் மற்றும் 02 பெண்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இதன்போது, அவர்களிடம் இருந்து 03 கிலோ 790 கிராம் தங்கமும், 01 கோடி 69 இலட்சம் ரூபாய் (ரூ. 16,900,000/-) பணமும் கைப்பற்றப்பட்டதுடன், சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் மற்றும் சந்தேகநபர் பெண்கள் 42 முதல் 58 வயதுக்குட்பட்டவர்கள் என்பதுடன், அவர்கள் வலப்பனை, நாவலப்பிட்டி, வெள்ளவத்தை, கொட்டாஞ்சேனை மற்றும் மோதர பகுதிகளைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

மேலும் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளில், சந்தேகநபர்களிடம் இருந்து தங்கத்தை உரசி பரிசோதிப்பதற்குப் பயன்படுத்தப்படும் கல் ஒன்று, 01 லீற்றர் அமிலம் மற்றும் 02 கிரைண்டர் இயந்திரங்கள் என்பனவும் பொலிஸ் பொறுப்பில் எடுக்கப்பட்டுள்ளன.

சந்தேகநபர்கள் இன்று பன்வில நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர், 2026.07.30 வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த தங்கமும் பணமும் சந்தேகநபர்களுக்கு கிடைத்த விதம் தொடர்பில் வத்தேகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பொலிஸ் ஊடகப் பிரிவு.